பக்கங்கள் 21

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 09 வியாழக்கிழமை 23.05.2025 அதிர்வு 292

## உள்ளூராட்சி உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய வர்த்தமானி இன்று வெளியீடு

(வி.ரி.சகாதேவராஜா)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய உறுப்பினர்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்று வெள்ளிக்கிழமை வெளியி 04

# ராஜபக்ஷக்களைச் சிறையில் அடைப்பதால் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது!

## அநுர அரசு மீது நாமல் எம்.பி. பாய்ச்சல்



"எம்மைச் சிறைக்கு அனுப்பினால் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடையாது. எம் மீது முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தின் ஊடாக தீர்த்துக் கொள்கின்றோம். ராஜபக் ஷக்களையும், கடந்த அரசுகளையும் விமர்சித்துக் கொண்டிருக்காமல் சமூகக் கட்டமைப்பில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள்."

– இவ்வாறு அநுர அரசிடம் 03




# சபாநாயகர் ஒரு பொம்மை

## சபையில் அரசைக் கிழித்துத் தொங்க விட்ட ரிஷாத்

"எதைச் சொன்னாலும் இந்தச் சபாநாயகர் கேட்பதாக இல்லை. நான் 24 வருடங்கள் கண்டிராத ஒரு பொம்மை சபாநாயகரையே இப்போது காண்கின்றேன். ஆறு மாதங்களாகியும் எங்களை எந்தவொரு கூட்டங்களுக்கும் அழைக்கவில்லை. பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒரு சதக் காசையாவது மக்களின் அபிவிருத்திகளுக்கு இந்த அரசு வழங்கவில்லை."

- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். 03

# காணி அபகரிப்பு வர்த்தமானியை இரத்துச் செய்ய இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தம் கொடுங்கள்!

## தென்னாபிரிக்கத் தூதுவரிடம் கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து

"வடக்கு மாகாணத்தில் காணி அபகரிப்பு நோக்கத்துக்காக அரசு வெளியிட்ட வர்த்தமானியை உடன் இரத்துச் செய்வதற்குத் தென்னாபிரிக்க அரசு, இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும்."

– இவ்வாறு இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தென்னாபிரிக்கத் தூதுவருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வியாழக்கிழமை கொழும்பில் உள்ள தென்னாபிரிக்கத் தூதரகத்தில் நடைபெற்றது. இதன்பின்னர் கஜேந்திரகுமார் எம்.பி. ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்ட 04






'மாற்றம் ஒன்றே மாறாதது' என்ற கூற்று கூட மாற்றப்பட வேண்டியது போல்தான் தோன்றுகின்றது.

மாற்றம் வேண்டும் என்று வலியுறுத்தி, அதன் பெயரில் அதிகாரத்திற்கு வந்த அரசுத் தரப்பு இப்போது மாற மாட்டேன் என்று அடம் பிடிப்பதாகவே தெரிகிறது.

சர்வதேச நாணய நிதியத்தோடு முன்னைய ரணிலின் அரசு செய்து கொண்ட உடன்பாட்டின் ஒழுங்குகளை மாற்றி அமைப்போம் என்று பீற்றிக் கொண்டு வந்த 'அநுரா அண்ட் கோ', இது விடயத்தில் ரணில் ஏற்கனவே போட்ட தண்டவாளத்தில் மாற்றம் ஏதும் இன்றி, சத்தம் சந்தடி காட்டாமல் பயணித்துக் கொண்டிருக் 03

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# வடக்கு மாகாணத்தில் கலைத்துறையை மேம்படுத்த தென்னிந்தியக் கலைஞர்கள் ஒத்துழைக்க வேண்டும்

## பிரபல இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனிடம் அமைச்சர் சந்திரசேகர் கோரிக்கை

(த.சுபேசன்)

வடக்கு மாகாணத்தில் கலைத்துறையை மேம்படுத்துவதற்கு இந்தியா குறிப்பாக தென்னிந்தியக் கலைஞர்கள் முழுமையான ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரபல இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் அவரது துணைவி மீனாட்சி நாராயணன் ஆகியோர் நாடாளுமன்றத்துக்கு நேற்று வியாழக்கிழமை வருகை தந்து, நாடாளுமன்ற வளாகத்திலுள்ள அலுவலகத்தில் அமைச்சரைச் சந்தித்தனர்.

அமைச்சர்களான ஹர்ஷன நாணயக்கார, சரோஜா போல் ராஜ் மற்றும் கே.இளங்குமரன், வைத்தியர் எஸ். சிறிபவானந்தராஜா, ஜே.ரஜீவன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இலங்கையின் கலைத்துறைக்கு இந்தியத் தரப்பின் பங்களிப்பு மற்றும் முதலீடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக வடக்கில் கலைத்துறையை மேம்படுத்துவதற்கு முடிந்தளவு ஒத்துழைப்புகளை வழங்குமாறு அமைச்சர் சந்திரசேகரன் கோரிக்கை விடுத்தார்.

கலைதுறை சார்ந்த விடயங்களில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறும் அழைப்பு விடுத்தார். இது பற்றி இந்திய கலைத்துறையில் உள்ள முதலீட்டாளர்களுக்கு தெளிவு படுத்துமாறும் இதன்போது அமைச்சர் கோரினார்.





# வெள்ளவத்தையில் தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி கைப்பற்றப்பட்டமை தொடர்பில் மற்றுமொருவர் கைது



வெள்ளவத்தை பகுதியிலுள்ள தொடர்மாடி குடியிருப்பொன்றுக்குள் தங்க முலாம் பூசப்பட்ட ரி -56 ரக துப்பாக்கி கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள 2 பெண்களும் 48 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வெள்ளவத்தை பகுதியிலுள்ள தொடர்மாடி குடியிருப்பொன்றுக்குள் சென்ற 40 வயதுடைய பெண்ணை அவதானித்த பாதுகாப்பு அதிகாரி நடத்திய சோதனையின் போது துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து துப்பாக்கியை வைத்திருந்த 40 வயதுடைய பெண்ணும் தொடர்மாடி குடியிருப்பு வளாகத்தில் வசிக்கும் 68 வயதான பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது என்பதுதான் உண்மை. அந்த விவகாரத்தில் மாற்றம் வரவே இல்லை. போக்கு மாறவே இல்லை.

ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்கும், தேவையான பெரும்பான்மைகளை எட்டுவதற்கும் கடந்த மூன்று, நான்கு தசாப்தங்களாக இந்த அதிகாரத் தரப்புகள் முன்னெடுத்த 'குதிரைப் பேரங்கள்' வெளியில் சட்டரீதியாக உறுதிப்படுத்தி நிரூபிக்கப்படாவிட்டாலும், அவை கொடி கட்டிப் பறந்தன - தாராளமாக இடம்பெற்றன - என்பது மக்களுக்கு நன்கு தெரியும்.

அறகலயப் போராட்டத்தின் போதும், முந்தைய அரசுகளை வீழ்த்தும் நடவடிக்கைகளின் போதும் இந்த சின்னத்தனமான குதிரைப் பேர ஊழல்களைதான் 'அநுரா அன் கம்பெனி' தன்னுடைய பிரதான பிரச்சார ஆயுதமாகப் பயன்படுத்தியது.

இந்த அநாகரிகமான - ஊழல் தனமான - முறையற்ற - மோசடியான - அரசியல் போக்கை மாற்றி அமைப்போம் என்று முரசறைந்துதான் அந்த கம்பெனி ஆட்சியைப் பிடித்தது.

ஆனால் அதிலும் கூட மாற்றமில்லை என்பதுதான் இப்போதைய நிலைமை.

கொழும்பு மாநகர சபைக்கான அதிகாரப் போட்டியில், முன்னைய 'மிஸ்டர் பத்து வீதம்' என்று அழைக்கப்படுகின்ற ராஜபக்ஷ கம்பெனியின் தரகர் அரசியல்வாதியைத் தோற்கடிக்கும் விதத்தில் திசை காட்டி பெரும் பேரம் பேசுவதாக செய்திகள் கசிகின்றன.

இருட்டில் நடக்கும் இந்த பேரங்களில் கோடிகள் கை மாறுகின்றன எனும் செய்திகள் வெளிவருகின்றன. கொழும்பு அரசியலில் ஒட்டுக் குழுக்கள் போல அழிச்சாட்டியம் பண்ணும் சில தமிழர் தரப்புக்களும் இந்த நேரத்தில் நல்ல விலைக்குப் போய் இருக்கின்றன எனத் தெரிகின்றது.

எல்லாம் நம் தலையெழுத்து. 'வந்ததும் அது, சிவன் தந்ததும் அது' என்றாகி விட்டது. யாம் என் செய்வோம்...?

☆ ☆ ☆

நிறைவேற்ற அதிகாரத்தையும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையையும் வைத்திருந்தும் கூட, ஆளுந்தரப்புக்கு சில விடயங்களில் நெருக்கடிகள் இல்லாமல் இல்லை.

உயர் பதவிகளுக்கு உரியவர்களை நியமிக்கும் அதிகாரம் நிறைவேற்றதிகார ஜனாதிபதியிடம் இருந்தாலும், இது விடயத்தில் அவரது பரிந்துரையை அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரித்தால் மாத்திரமே அந்த நியமனம் சாத்தியமாகும். இல்லையேல் ஜனாதிபதியின் விருப்பு - பரிந்துரை - எல்லாமே அடிபட்டுப் போகும்.

அரசமைப்பு கவுன்ஸிலில் பெரும்பான்மை தமக்கு ஆதரவாக இல்லாத நிலையில் உயர் பதவிகளுக்கு உரியவர்களை - தாம் விரும்பியவர்களை நியமிக்க - முடியாமல் ஜனாதிபதி அல்லாடுகின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இப்போதும் கூட கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா முன்மொழிந்த பெயரை அரசமைப்புக் கவுன்ஸில் நேற்றுப் பகல் நிராகரித்து விட்டது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் எச்.டி.பி. சந்தனாவின் பெயரை ஜனாதிபதி இதன்போது முன்மொழிந்திருந்தார்.

இவ்விடயத்துக்காக நேற்று முன்தினம் அரசமைப்புக் கவுன்ஸில் கூடிய போது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன்படி, அரசுத் தரப்பில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அபுபக்கர் அட்டம்பேவ் ஆகியோர் இந்த வேட்புமனுவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா மற்றும் சிவில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று பிரதிநிதிகள் இந்த முன்மொழிவுக்கு எதிராக வாக்களித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் மட்டுமே வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நெருக்கடிக்கு மத்தியில் தற்போதைய கணக்காய்வாளர் நாயகம் தர்மபால கம்மன்பிலவை மேலும் ஆறு மாதங்களுக்குப் பதவியில் நீடிக்க அனுமதிக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க விடுத்த கோரிக்கையை அரசமைப்புக் கவுன்ஸில் நேற்று அங்கீகரித்துள்ளது.

இந்தப் பரிந்துரையை அனைத்து உறுப்பினர்களும் அங்கீகரித்தனர் என வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

## சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில், எமது கட்சி நாடு முழுவதும் 140 ஆசனங்களை வென்றுள்ளது. இந்த வெற்றிக்காக வாக்களித்த சகலருக்கும் எனது நன்றிகள். எந்த வெற்றியைப் பெற்றாலும் பல சபைகளில் ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பெரிய கட்சிகள், சுயேச்சைக் குழுக்களிடம் மண்டியிடும் அல்லது மன்றாடும் நிலையையும் இந்த தேர்தல் முறை ஏற்படுத்தியுள்ளது. எனக்குத் தெரிந்தவரை கற்பிட்டியில் ஒரு உறுப்பினருக்கு 25 இலட்சம் ரூபா தருவதாகவும் விலை பேசப்பட்டுள்ளது. எனவே, ஜனநாயகத்தை விலை பேசும் இந்தத் தேர்தல் முறைமை மாற்றுங்கள் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

வடக்கையும் தெற்கையும் இணைக்கும் புத்தளம் – மன்னார் பாதையை இந்த அரசு நிரந்தரமாக மூடிவிட்டது. இந்தப் பாதை மூடப்பட்டதை இனவாதமாகவே பார்க்கின்றோம். ஏற்கனவே திறக்கப்பட்டிருந்த இந்தப் பாதையை மூடுமாறு, இனவாத அரச சார்பற்ற நிறுவனங்களே வழக்குத் தொடர்ந்தன.

அம்பாந்தோட்டையில் அல்லது குருநாகலில் இவ்வாறான பாதையை மூடுவார்களா? இந்தப் பாதையைத் திறந்து தருவதாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்தனர். இவையெல்லாம் காற்றில் பறந்துவிட்டன.

இப்போது நீதித் துறை இப்பாதை விவகாரத்தில் தலையிட்டுள்ளது. நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை மீள் பரிசீலனை செய்ய ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழாமை நியமிக்குமாறு கோருகின்றேன்.

இனவாதிகளுடன் வாழ முடியாதென்பதற்காக ஒரு யுத்தத்தையே எதிர்கொண்ட நாடு இது. இதனால், பல சமூகத்தினரும் அழிந்தனர். நான் உட்பட எனது முஸ்லிம் சமூகமும் அகதியானது.

மேலும், மக்களின் பிரதிநிதிகளான எமது பாதுகாப்புக்கு இரண்டு பொலிஸாரையாவது தாருங்கள். ஆங்காங்கே கண்டெடுக்கப்படும் ஆயுதங்கள், யாரைக் குறிவைப்பதற்குக் கொண்டுவரப்பட்டவையோ தெரியாது. வீதிகளில் பயணிக்கும்போது குடி வெறியர்களையும் எதிர்கொள்கின்றோம். எனவே, எங்களைப் பாதுகாருங்கள். எதைச் சொன்னாலும் இந்தச் சபாநாயகர் கேட்பதாக இல்லை. நான் 24 வருடங்கள் கண்டிராத ஒரு பொம்மை சபாநாயகரையே இப்போது காண்கின்றேன்.

ஆறு மாதங்களாகியும் எங்களை எந்தவொரு கூட்டங்களுக்கும் அழைக்கவில்லை. பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒரு சதக் காசையாவது மக்களின் அபிவிருத்திகளுக்கு இந்த அரசு வழங்கவில்லை." – என்றார்.

---

## ராஜபக்ஷ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வேண்டு கோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே நாமல் எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

"அரசு ஆட்சிக்கு வந்து 7 மாதங்கள் நிறைவடைந்துள்ளன. வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்வதற்கு அரசு இதுவரையில் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உப்பு பிரச்சினைக்கு தீர்வு காணாதவர்கள் வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்வது சந்தேகத்துக்குரியதே,


நாட்டு மக்கள் மரமுந்திரிகை சாப்பிடுவதைப் போன்று உப்பு சாப்பிடுவதில்லை என்று அரசு பொறுப்பற்ற வகையில் பதிலளிக்கின்றது. உணவின் அடிப்படைப் பொருளாகவே உப்பு காணப்படுகின்றது. ஆகவே, உப்பு உற்பத்தியில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காணுங்கள்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் "நானும் இராணுவ வீரன்" என்று குறிப்பிட்டுக் கொண்டு திரிந்தவர்கள் தற்போது தலைமறைவாகியுள்ளார்கள்.

இராணுவத்தில் சேவையாற்றிய பலர் இன்று ஆளும் தரப்பில் உள்ளார்கள். பலர் பதில் அமைச்சர்களாகவும் உள்ளார்கள். இராணுவ வீரர்களை வீரர்கள் என்று குறிப்பிடும் தற்றுணிபு இவர்களுக்குக் கிடையாது. தேர்தலுக்கு முன்னர் இராணுவ வீரர்களைச் சிப்பாய் என்று குறிப்பிடவில்லை.

அரசின் பலவீனம் மற்றும் குறைபாடுகளை எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டும்போது அதனை அரசால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் எதிர்க்கட்சியினர் இலக்கு வைக்கப்படுகின்றார்கள். எம்மைச் சிறைக்கு அனுப்பி அடிப்படை மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. எம் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தின் ஊடாகத் தீர்த்துக்கொள்கின்றோம்.

சமூகக் கட்டமைப்பில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு ராஜபக்ஷக்கள் காரணம், கடந்த அரசு காரணம் என்று ஆட்சிக்குவந்தவுடன்குற்றஞ்சாட்டினீர்கள். இனியும் இந்தக் குற்றச்சாட்டு செல்வாக்கு செலுத்தாது. ஏனெனில் 6 மாதங்கள் கடந்து விட்டன. ஆகவே, போலியாக விமர்சனங்களையும், குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்துக் கொண்டிருக்காமல் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள்." – என்றார்.




# தட்டுப்பாடின்றி உப்பு விநியோகம்

அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்படும் ஒரு தொகை உப்பு நாட்டிற்கு கிடைக்கும் என வர்த்தகம், வணிகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த வாரம் முதல் தட்டுப்பாடின்றி உப்பு விநியோகத்தை மேற்கொள்ள முடியும் என வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு பதில் அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன தெரிவித்தார்.

30,000 மெட்ரிக் தொன் உப்பு இறக்குமதி செய்யப்படுகின்றது.

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“வடக்கு மாகாணத்தின் சுமார் 6,000 ஏக்கர் காணிகளை அரச காணியாகச் சுவீகரித்து திட்டமிட்ட சிங்கள பௌத்த மயமாக்கலை மேற்கொள்ளும் கபட முயற்சியில் மூன்று மாத காலத்தில் மக்கள் தமது காணிகளை உறுதிப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் கடந்த 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி வெளியிட்ட வர்த்தமானியை அரசு மீளப் பெறவேண்டும்.

வடக்கு, கிழக்கு மக்கள் யுத்தகாலத்தில் பல தடவைகள் இடம்பெயர வேண்டிய சூழல் ஏற்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களின் சொந்தமான ஆவணங்கள் அழிவடைந்தும் தொலைந்தும் உள்ளன. அத்துடன் சுனாமி மூலம் எமது மக்கள் சொத்துக்கள், ஆவணங்களை இழந்தார்கள். ஆகவே, ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்துவது சாத்தியமற்ற விடயம்.

அத்துடன் போர் காரணமாக தமிழ் மக்கள் பெருமளவில் புலம்பெயர்ந்துள்ளனர். இந்த மக்கள் பயங்கரவாதத் தடைச் சட்ட அச்சுறுத்தல் காரணமாகவும் நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

எனவே, அரசின் நோக்கம் மக்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது இல்லை. மாறாக மக்களின் ஆவணங்களற்ற காணிகளை அரச காணிகளாகச் சுவீகரிப்பதே இவர்களது நோக்கமாக உள்ளது.

ஆவணங்கள் சரி பார்க்கப்பட்டு உரித்துக்கள் வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனாலும், இந்த வர்த்தமானி மூலம் மேற்கொள்ளப்படவுள்ள அபகரிப்பை ஒரு போதும் அனுமதிக்க முடியாது எனவும், அதற்கான அழுத்தங்களைத் தென்னாபிரிக்க அரசு, இலங்கை அரசுக்குப் பிரயோகிக்க வேண்டும் எனவும் தூதுவரிடம் வலியுறுத்தினோம்.

இரண்டாவது குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களத்திற்கு 79 ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே சொந்தமானது என்று 1932 ஆம் ஆண்டு வர்த்தமானி வெளிப்படுத்துகின்றது. எனினும், அதற்கு மேலதிகமாக 325 ஏக்கர் காணிகளைக் குறித்த தொல்பொருள் திணைக்களத்துக்கு வழங்க வேண்டும் என்று கடந்த ஆட்சிக்காலத்தில் புத்த பிக்கு அரசிடம் கோரியிருந்தார்.

எனினும், தமிழ் மக்கள் விவசாயம் செய்து வந்த காணிகள் என்பதனால் அவர்களது விவசாய நடவடிக்கைகளைக் கருத்தில்கொண்டு அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த 325 ஏக்கரிலும் பொதுமக்கள் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டிருந்தது.

எனினும், வழமை போன்று குறித்த பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மூன்று பேர் நீதிக்குப் புறம்பாகக் கைது செய்யப்பட்டு இரண்டு பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மட்டத்தில் தீர்வு எட்டப்பட்ட ஒரு தீர்மானத்தை அமுல்படுத்தாமல் விவசாய நடவடிக்கைகள் தடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த வயல்களுக்கு நீர் விநியோகம் செய்ய வேண்டிய குளத்தில் தமிழ் மக்கள் மீன்பிடியில் ஈடுபடவும் தடையும் விதிக்கப்பட்டுள்ளதோடு விவசாயத்துக்குக் குறித்த நீரைப் பயன்படுத்தத் தடையையும் விதித்துள்ளனர். இதன் மூலம் விவசாயிகளுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல்கள் எதுவும் அற்ற குறித்த பகுதியில் மக்கள் சுதந்திரமாகத் தொழில் செய்வதனை உறுதிப்படுத்தவும், அநீதியான முறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு விவசாயிகளையும் விடுவிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரினோம்.

மூன்றாவதாக தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பில் பேசியிருந்தோம். சட்டவிரோதமான விகாரை என்று தெரிந்தும் இன்னமும் அந்தக் காணிகளின் உரிமையாளர்களிடம் காணிகளை வழங்காது அரசின் செயற்பாடுகள் தொடர்கின்றன.

தையிட்டி விகாரை சட்டவிரோதமானது. தொல்பொருளுடன் தொடர்பு அற்றது. சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட அந்த விகாரை அகற்றப்பட்டே ஆகவேண்டும். காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க தென்னாபிரிக்க அரசு அழுத்தம் வழங்க வேண்டும் என்றும் தூதுவரிடம் கோரினோம்.” - என்றார்.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டப்படும்.

161 உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய உறுப்பினர்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இதனை நேற்று தெரிவித்துள்ளார்.

எஞ்சியுள்ள 178 உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களின் பெயர் விவரங்களை அனுப்பி வைக்குமாறு, தொடர்புடைய கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அடாவடி மிரட்டல்கள்!

அதிகாரம் கைக்கு வந்தால் அரசியல் தலைவர்களைப் பிடிக்க முடியாது. தலைகால் தெரியாமல், துள்ளிக் குதித்து, அவர்கள் ஆடும் ஆட்டம் பல சமயங்களில் அவர்களுக்கே புரிவதில்லை. அதிகாரத்தை இழக்கும் போதுதான் தாங்கள் ஆடிய ஆட்டம் யாது என்பது அவர்களுக்கே விளங்கும்.

இதை இலங்கையின் கடந்த கால அரசியலில் பட்டறிந்தவர்கள் பலர். மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ முதல் பலர் அதிகாரம் கைகளில் கிடைத்த போது ஆடிய ஆட்டங்கள் மறக்க கூடியவை அல்ல.

அதுவும் இப்போது தேசிய மக்கள் சக்தி அரசின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியினருக்கு நிறைவேற்று அதிகாரமும் மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற பெரும்பான்மையும் ஒரே சமயத்தில் கிடைத்திருக்கின்றமையால் அவர்கள் அதிகம் துள்ளிக் குதிக்கின்றார்கள்.

ஆணைப் பெண்ணாக்குவதைத் தவிர, மிகுதி எல்லா அதிகாரங்களும் தமக்கு உள்ளன என சண்டப் பிரசண்டம் பண்ணிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா முதல் பலரும் அதிகாரத்தை இழந்து பெட்டிப் பாம்பாக அடங்கியே போனார்கள் என்பது சரித்திரம்.

தாங்கள் அறுதிப் பெரும்பான்மை பெறாத உள்ளூராட்சி சபைகளிலும், மற்றைய கட்சிகளை விட தனித்து அதிக ஆசனங்களை பெற்றிருந்தால் அங்கெல்லாம் ஆட்சி அதிகாரம் தங்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்று மிரட்டுகிறார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா. எதிர்க்கட்சிகள் அரைவாசிக்குக் கூடிய ஆசனங்களைக் கொண்டிருக்கும் சபைகளில், அவை தங்களுக்குள் ஒன்றிணைந்து, அதன் மூலம் மக்கள் ஆணையைத் தமதாக்கிப் பிரயோகிப்பதை அனுமதிக்க கூடாது என்று புதுவித ஜனநாயகத் தத்துவம் பேசும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா, அதனை மீறி எதிர்க்கட்சிகள் சபைகளில் நிர்வாகத்தை நடத்த முற்பட்டால், நிறைவேற்ற அதிகாரத்தையும் நாடாளுமன்ற பெரும்பான்மையையும் வைத்துப் புதிய சட்டங்களை கொண்டு வந்து, அந்த உள்ளூராட்சி சபை நிர்வாகங்களை விரட்டுவோம் என மிரட்டல் விடுகிறார்.

மறுபுறத்தில் வெளிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்தோ தமிழ் மக்கள் இனி மேலும் இந்த நாட்டில் இனவழிப்பு, இனப்படுகொலை நடந்தன எனப் பிரசாரப்படுத்த முற்பட்டால், அதனைப் புதிய சட்டங்களைக் கொண்டு வந்து அடக்குவோம் என்று அச்சுறுத்துகின்றார்.

நிறைவேற்று அதிகாரமும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையும் இருந்து விட்டால் எதுவும் செய்யலாம் என்ற திமிர்த்தனமான பேச்சுக்கள்தான் இந்தத் தலைவர்களிடமிருந்து வருகின்றன.

ஆனால் ஒன்றை இவர்கள் மறந்து விட்டார்கள். இந்த நாடாளுமன்ற வலிமை, நிறைவேற்று அதிகாரம் எல்லாம் கைகளில் இருந்தாலும் கூட, உயர் நீதிமன்றத்தில் நீதித்துறையின் பரிசீலனையைத் தாண்டித்தான் சட்டங்கள் வர வேண்டும் என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் சமஷ்டி முறையைக் கோருவதற்கு தமிழர்களுக்கு உரிமை இருக்கின்றது என உத்தரவிட்ட உயர்நீதிமன்ற ஆயம் இங்கிருந்தது என்பதை அப்படி மிரட்டுவோர் மறந்து விடக் கூடாது.

ஜனநாயக முறைமைகளை - அடிப்படை உரிமைகளை - தனித்துவ உரித்துக்களை - கண்மூடித்தனமாக அடக்கும் அடாவடிச்சட்டங்களை நாடாளுமன்றப் பெரும்பான்மையும் நிறைவேற்று அதிகாரமும் கையில் இருக்கின்றன என்பதை மட்டும் வைத்துக்கொண்டு நிறைவேற்ற முடியாது என்பதை ஆளும் தரப்பில் இத்தகைய திமிர்த்தன அறிவிப்புகளை விடுக்கும் அடாவடி அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய அடாத்தான நடவடிக்கைகளை - மோசமான சட்ட உருவாக்க முயற்சிகளை - சர்வதேசமும் வாய் மூடிப் பார்த்திருக்காது என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்வதும் நல்லது.

# திருமலை மாவட்டத்தில் வனவளத்துறையின் அத்துமீறல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்!

## நாடாளுமன்றில் குகதாசன் எம்.பி. இடித்துரைப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் வனவளத்துறையின் அத்துமீறல் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் வலியுறுத்தினார்.

திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெறுகின்ற நில வன்கவர்வு தொடர்பில் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே குகதாசன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "திருகோணமலை மாவட்டத்தில் இப்பொழுது நில வன்கவர்வு தொடர்பாக விவசாயிகள் எதிர்கொள்கின்ற சிக்கல்களை இந்த மேலான அவையின் கவனத்திற்குக் கொண்டு வர நினைக்கின்றேன்.

நான் பேசிக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் சம்பூர் கிராம சேவையாளர் பிரிவில் 40 விவசாயிகளுக்குச் சொந்தமான 250 ஏக்கர் நிலத்தையும் கிளிவெட்டி கிராமசேவகர் பிரிவில் 37 விவசாயிகளுக்கு சொந்தமான 85 ஏக்கர் நிலத்தையும் பாரதிபுரம் கிராமசேவகர் பிரிவில் 45 விவசாயிகளுக்கு சொந்தமான 117 ஏக்கர் நிலத்தையும், ஆசாத் நகர் கிராமசேவகர் பிரிவில் 70 விவசாயிகளுக்கு சொந்தமான 148 ஏக்கர் நிலத்தையும் தோப்பூர் கிராம சேவையாளர் பிரிவில் 60 விவசாயிகளுக்கு சொந்தமான 93 ஏக்கர் நிலத்தையும் என ஆக மொத்தம் 252 விவசாயிகளுக்கு சொந்தமான 693 ஏக்கர் நிலத்தை வனத்துறையானது தனது எல்லைக் கற்களை இட்டு பிடித்து வருவதோடு விவசாயிகளை விவசாயம் செய்ய விடாமல் தடுத்தும் வருகின்றது.

இதைப் போலவே சேருவில பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் தங்கநகர் கிராம சேவையாளர் பிரிவிலும் 85 விவசாயிகளுக்குச் சொந்தமான 145 ஏக்கர் நிலத்தை எல்லைக் கற்களைப் போட்டு பிடித்துள்ளது. வனத்துறையின் இந்தச் செயற்பாட்டை உடன் நிறுத்த ஆவன செய்யுமாறு துறைசார் அமைச்சரைக் கேட்டுகொள்கிறேன்.

திருகோணமலை மாவட்டத்தில் நில வன்கவர்வு என்பது இப்பொழுது தோன்றிய பிரச்சினை அல்ல. 1983 ஆண்டு தொடக்கம் 2009 ஆண்டு வரை போர் நிலவிய காலத்தில் மக்கள் இடம்பெயர்ந்தனர். அவ்வேளையில் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வந்த நிலங்களை வனத்துறையும், வனவிலங்குத் துறையும் எல்லைக் கற்களைப் போட்டுப் பிடித்து வைத்துள்



ளார்கள்.

எடுத்துக்கட்டாக திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் போர் காலத்திலே கைவிடப்பட்ட 205 சிறுகுளங்களையும் 25 அணைக் கட்டுகளையும் கொண்டமைந்த அண்ணளவாக 12000 ஏக்கர் நிலத்தை வனத்துறை எல்லைக் கற்களைப் போட்டுப் பிடித்து வைத்துள்ளது . இதன் மூலம் 24,000 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி இல்லாமல் போயுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வெருகல் பிரதேச செயலாளர் பிரிவின் பரப்பளவு 32,042 ஏக்கர் ஆகும். இதில் வனவிலங்குத் துறை 25,242 ஏக்கர் நிலத்தை தமக்கு உரியது எனவும், வனத் துறை 11,906 ஏக்கர் நிலத்தைத் தமக்கு உரியது எனவும் சொந்தம் கொண்டாடி வருகின்றனர்.

மொத்தம் 32,042 ஏக்கர் பரப்பளவு நிலத்தைக் கொண்ட வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் எப்படி 37,148 ஏக்கர் நிலத்தை கைபற்றினார்கள்? இப்படியான திறமை இந்த நாட்டில் உள்ள வனத்துறை மற்றும் வனவிலங்குத் துறை அதிகாரிகளைத் தவிர உலகில் வேறு யாருக்கும் இருக்க முடியாது என மக்கள் கேலி செய்கின்றனர்.

அதேபோன்று திருகோணமலை மாவட்டதில் உள்ள குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 29,430 ஏக்கர் நிலத்தை வனத்துறை கையகப்படுத்தி வைத்துள்ளது. மேலும் 28,372 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த முனைகின்றது. வனவிலங்குத் துறை 7,330 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி உள்ளது. தொல்பொருள் துறை 1,087 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி உள்ளது. புத்த பிக்குகள் பூஜா பூமி என்ற பெயரில் 3,820 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி உள்ளனர்.

இதன் மூலம் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் 1985 ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் விவசாயம் செய்த 70,039 ஏக்கர் நிலம் நெல் உற்பத்தி செய்யாமல் தடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு போகத்தில் 140,000 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி குறைக்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தின்போது 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் நெற் செய்கைக்குப் பயன்படுத்திய நிலங்களை நெற்செய்கைக்கு விடுவிக்கும்படி அரச ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், இதுவரையில் குறித்த ஆணை முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

"ஆசாரி விடை கொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்க மாட்டார்" என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதேபோல் அரசு முடிவு செய்தாலும் அரச அதிகாரிகள் அதனைச் செயற்படுத்துவதாக இல்லை. இதன் மூலம் இவர்கள் நாட்டின் நெல் உற்பத்தியை அதிகரிக்க விடாமல் தடுத்து அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனரா? என எண்ணத் தோன்றுகின்றது. இதனை அமைச்சர் கவனத்தில்கொள்ள வேண்டும்.

அதேபோல் தொல்பொருள் துறையும் மக்கள் விவசாயம் செய்த நிலங்களைத் தமது எல்லைக் கற்களைப் போட்டுப் பிடித்து வைத்துக்கொண்டு, அதனுள் தொல்பொருள் சின்னங்களைக் கண்டுபிடிக்க முடியாமலும் அதே வேளை அதனுள் மக்களை விவசாயம் செய்ய விடாமலும் தடுத்து வருகின்றது.

எடுத்துக் காட்டாகத் திரியாய் கிராமத்தில் உள்ள ஏறத்தாள ஆயிரம் ஏக்கர் விவசாய நிலத்தைக் கையகப்படுத்தி எல்லைக் கற்களைப் போட்டு மூன்றுஃ நான்கு ஆண்டுகளாகப் பிடித்து வைத்துள்ளனர். எனினும், அப் பகுதியில் எதுவித தொல்பொருள் சின்னங்களையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதுடன் அந்த நிலத்தை மீள மக்களுக்கு விவசாயம் செய்ய வழங்கவும் மனம் இன்றி இருக்கின்றனர். இதனால் நெல் உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்படுகின்றது.

முடிவாக திருகோணமலை மாவட்டத்திலே 1985 ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் விவசாயம் செய்த 118,710 ஏக்கர் நிலத்தை வனத் துறையினரும் 111,619 ஏக்கர் நிலத்தை வன விலங்குத் துறையினரும் 2,599 ஏக்கர் நிலத்தை தொல்பொருள் துறையினரும் பூஜா பூமி, பூஜாக் கொடை என்னும் பெயர்களில் ஏறத்தாழ 3,820 ஏக்கர் நிலத்தைப் புத்த பிக்குமாரும் ஆக மொத்தம் மக்கள் விவசாயம் செய்த 2,36,748 ஏக்கர் நிலத்தை விவசாயம் செய்ய விடாமல் தடுத்து வருகின்றனர். இதன் மூலம் ஒரு போகத்தில் மட்டும் ஏறத்தாழ ஐந்து இலட்சம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தி இல்லாமல் போகின்றது. இதை இந்த அரசு கருத்தில்கொள்ள வேண்டும்.

இதனை விடுவிப்பதன் மூலம் ஐந்து இலட்சம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தியை அதிகரிக்க ஆவன செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்

தொடர்ச்சி▼

# திருமலை மாவட்டத்தில் வனவளத்துறையின் அத்துமீறல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்!

தொடர்ச்சி▲

றேன்.

இதேபோல் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் முதன்மையான சிக்கலாக மேய்ச்சல் தரைப் பிரச்சினை காணப்படுகின்றது. வனவிலங்குத் துறையானது மரபு வழியாகக் கால்நடை வளர்ப்பாளர் பயன்படுத்தி வந்த அங்கோடை, மாவிலாறு பகுதி உள்ளிட்ட மேய்ச்சல் தரைகளைப் பிடித்து வைத்துக் கொண்டு, இந்த இடத்தில் காட்டுவிலங்குகள் மட்டும் மேயலாம். ஆனால் வீட்டு விலங்குகள் மேய முடியாது எனத் தடுத்து வருகின்றது.

2008 ஆம் ஆண்டில் 600 கால்நடை வளர்ப்பாளர்களும் 28,000 கால்நடைகளும் வெருகல் கோட்டத்தில் காணப்பட்ட வேளையில், போதிய உணவு இன்றி நோயினால் பாதிக்கப் பட்டு சில ஆயிரம் கால்நடைகள் இன்று இறந்து போயுள்ள சூழலில், இப்போது 15,200 கால்நடைகள் மட்டுமே எஞ்சி உள்ளன.

கால்நடைகளின் இழப்புக்கும், கால்நடை வளர்ப்பாளர்களின் பொருளாதார இழப்புக்கும் பொறுப்புக் கூறுவது யார்? இத்தகைய சிக்கல் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தம்பலகாமம், கிண்ணியா, குச்சவெளி, மொறவெவ முதலிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, கமத்தொழில்,கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மேற்கூறிய விடயங்களைக் கவனத்தில் எடுத்து 1985 ஆம் ஆண்டுக்கு முன்பு விவசாயிகள் பயிர் செய்த நிலங்களையும், நீர் நிலைகள் அமைந்துள்ள நிலங்களையும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையையும் விரைவாக விடுவித்து நீர்ப்பாசனத் திட்டங்களைச் சீர்செய்து நாட்டின் நெல் உற்பத்தியையும் கால்நடைகளின் வளத்தையும் பெருக்க ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு எனது உரையை நிறைவு செய்கின்றேன்." – என்றார்.

# சிலப்பதிகார விழா

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் "புலமை ஒலி – 2025" சிலப்பதிகார விழா யாழ். வடமராட்சி அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

இன்று, நாளை, நாளைமறுதினம் என மூன்று தினங்கள் இந்த விழா நடைபெறும். மூன்று நாள்களும் மாலை 4 மணிக்கு விழா ஆரம்பமாகும் என்று அகில இலங்கை இளங்கோ கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

# டிஜிட்டல் அட்டை எரிபொருள் விநியோகம்




அரச நிறுவனங்களின் வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகத்திற்காக டிஜிட்டல் அட்டை முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எரிபொருள் விநியோகத்தில் காணப்படும் முறைகேடுகளை தவிர்ப்பது மற்றும் செயற்றிறனை அதிகரிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் கொள்கையின் கீழ் இந்த முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதுவரை அரச நிறுவனங்களின் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கும்போது கூப்பன் முறைமையே காணப்பட்டதாக பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர், டொக்டர் மயூர நெத்திகுமார தெரிவித்தார்.

மேற்படி கூப்பனுக்கு பதிலாக தற்போது டிஜிட்டல் அட்டை முறைமையை அறிமுகப்படுத்தற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த டிஜிட்டல் அட்டை மூலம் அனைத்து எரிபொருள் விநியோக நிலையங்களிலும் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர், டொக்டர் மயூர நெத்திகுமார தெரிவித்துள்ளார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.



ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் ‘காலைக்கதிர்’ நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

29

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



பிரதமர் ராஜீவ் காந்தியைத் தாக்கியவரை தேசாபிமானி என்று அறிவித்தது ஜே.வி.பி

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவின் தற்போதைய நிலைப்பாடு, தாங்கள் ஏற்படுத்த விரும்பும் புதிய அரசமைப்பில் நம்பிக்கை வைத்து நாட்டு மக்கள் யாவரும் ஒன்றாக முன்னேற வேண்டும் என்பது தான்.

இன்றைய சர்வதேச அரசியல் மாற்றங்களுக்கு மத்தியில் இலங்கை சமயோசிதமாகவும், தந்திரமாகவும், ஒற்றைக் கயிற்றில் அதல பாதாளத்தில் விழுந்து விடாமல் நடக்க வேண்டி உள்ளது. அமெரிக்கா, இந்தியா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்று இடையே உள்ள போட்டிகள் ஒரு பக்கம். இவை யாவற்றோடும் தற்சமயம் பெரிய சிக்கலாக பார்க்கவேண்டிய பொருளாதாரப் பிரச்சினைக்கும் ஈடு கொடுக்க வேண்டி உள்ளது. தாங்கள் எடுக்கும் நடைமுறைகள் தளும்பி விடாமல் இருப்பதற்காகவும். அரசின் அமைச்சர்கள் அல்லது அதன் அதிகாரிகள் எவரும் கூட பக்கம் சாய்ந்து விடக்கூடாது என்பதற்காகவும் வெளிநாட்டு தூதுவர்களோ, பத்திரிகையாளர்களோ சந்திப்புக்களுக்கு அன்றி பேட்டிகளுக்காக அணுகினால், அவை அரசின் வெளியுறவுத்துறை அமைச்சினால் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இலங்கை தொடர்பில, நீடித்து, நிலைத்து நிற்கக் கூடியதான சமாதான ஏற்பாடாக இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை இந்தியா பார்த்தது. அதில் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களும் அமைந்திருந்தன. இந்த ஒப்பந்தம் ஜே.வி.பியினால் எதிர்க்கப்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



பிரதமர் மோடிக்கு செங்கம்பள வரவேற்புக் கொடுக்கும் ஜே.வி.பி. அரசு

தொடர்ச்சி▲

பட்டு, ஜே.ஆர். அரசுக்கு எதிரான போராட்டங்க ளால் இரத்த ஆறு ஓடியது.

இன்று அதே ஜே.வி.பியின் அநுரா அரசு வெளிப் படையாகவே பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை இந்திய அரசுடன் செய்து, நாங்கள் முன்னர் இந்தியாவுடன் விரோத உணர்வுகளில் இருந்தோம், ஆனால் இன்றைய புரிந்துணர்வில் நண்பர்களாக இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்து வைக்கப் பட்ட நேரத்தில் தமிழர் தரப்பின் நிரந்தர சமாதானத் துக்காகப் பேசப்பட்டவைகள் குறித்து கருத்துக்கள் கூறப்படவில்லை. ஆனால், “தமிழர் அபிலாசைகள் நிறைவேற்றப்படும் என இலங்கை அரசின் தலைவர் களால் தரப்பட்ட உறுதிகளை நாங்கள் ஏற்றுக் கொண்டு நம்புகிறோம்” எனப் பிரதமர் மோடி கூறினார். இரண்டு தரப்புக்களுமே புரிந்து கொண்ட ‘தமிழரது அபிலா சைகள்’ பற்றி எதுவும் விளக்கப்படவுமில்லை. இவை காலம் காலமாக ஜே.ஆர்., விஜயவீரா, சந்திரிகா, ரணில் யாவரும் ‘தமிழருக்கு என தனியான பிரச்சினைகள் உண்டு’ என தெரிவிப்பது போலவும், ஆனால் அவை ‘ஒரு நாடு; ஓர் அதிகாரம்’ என அநுராவினால் கூட முடித்து தீர்க்கப்படாமல் போவது போல ‘தமிழர்க ளின் அபிலாசைகள்’ என்பவை மூடுபனியாகவே இருக்கின்றன.

ஆனால், அரசுகளோ பாதுகாப்பு ஒப்பந்தத்தின் சரத்துக்களை இதுவரை வெளிப்படுத்தவில்லை. தகவல் அறியும் சட்டத்தின் கீழ் அவை கேட்கப்பட்டா லும், ‘தேசிய பாதுகாப்பு கருதி’ வெளிப்படுத்தப்பட மாட்டாது. நிர்ப்பந்தங்களால் வெளியிட்டாலும் கூட, முக்கிய சரத்துக்கள் நீக்கப்பட்டு, கூறு கூறாகப் பகுதிகள் வெளியிடப்படலாம். இந்தியாவுக்கு அனுசரணையாக அதன் பாதுகாப்புக் கவசத்துடன் நின்று விட்டால், இந்தியா இங்கு ஈழத் தமிழர்களது அபிலாசைகளை உள்நாட்டுப் பிரச்சினையாக விட்டுவிட்டு, தலையிட்டு மூக்கை நுழைக்காது, சர்வதேச அரங்குகளிலும் கூட தங்களுக்கு ஆதரவாக நிற்பார்கள் என்ற சிந்தனைக ளும் முன்னர் போல உந்தியிருக்கலாம். ஆனால் இந்த முன்னேற்றத்தில் – மாற்றத்தில் – தமிழ் மக்க ளின் புத்திசாலித்தனமான அணுகுமுறை எதுவாக வேண்டும்?

ஜே.வி.பி. 1987 ஆம் ஆண்டு காலத்துக்கு முன், வட இந்தியர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் இந்திய அரசை இனரீதியாக தென் இந்தியர்களை மேவி, அணுகும் யுக்தியை வைத்திருந்ததை முன்னர் குறித்து இருந்தேன். அது இப்போது நோக்கத்தக்கது.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கி யர்கள் எனப் பலரும் வாழும் பல்லின, பன்முகத் தன்மை கொண்ட நாடு இலங்கை.

அந்த, மக்கள் அங்கு குழுமங்களாக, தங்களது கலாசாரம், மொழி, மதம் என்பவற்றின் விழுமி யங்களை இதுவரைப் பாதுகாத்து வந்தமை போல, அவை தொடர்ந்தும் பராமரிக்கப்பட வேண்டும் என்ற கணிப்பில் இருந்து, வடக்கு – கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்கள் பாரம்பரியமாக மற்ற இன மக்களோடு சேர்ந்து வாழ்ந்த பிரதேசங்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டு, நாட்டின் ஒற்றுமை, இறைமை ஆகியன அதன் நிர்வாகக் கட்டமைப்புக்கு உள்ளான நிலப்பகுதி உருக்குலையாமல் இருக்கும் வண்ணமும், அதே சமயம் அங்கிருக்கும் பன்முகத்தன்மையை பராம ரிப்பதற்காகவும், எல்லா இன மக்களும் சம உரிமைக ளோடு, சமத்துவமாகவும் வாழ வேண்டும் என்ற எண் ணங்களிலேயே1987ஆம்ஆண்டின்இந்திய–இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அந்த நோக்கங்களுக் கும் தேசிய மக்கள் சக்தி இன்று கூறும் சம உரிமை, சமதர்மம் என்ற கொள்கை நோக்கங்களுக்கும் வித்தி யாசம் காண முடியாது. ஆனால் எந்த விதமான வடி வத்தில் இது வருகின்றது என்பதில்தான் பிளவுகள் – பிரச்சினைகள் – தொடங்குகின்றன.

ஆரம்ப காலத்தில், ஆயுதம் தாங்கிய தமிழ் விடுத லைப் போராளிகள் ‘தமிழீழம்’ என்ற சுதந்திர நாட்டுக்கா கப் போராடிக் கொண்டிருந்தார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி கூட அதனையே கோரியது. ஜே.வி.பி. அந்த

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

ஒப்பந்தத்தை முழுமையாக எதிர்த்து, அதற்காக அதன் அங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் பலரின் உயிர்களை அர்ப்பணிப்புக்கு உள்ளாக்கியது. இலங்கையின் இறைமையும், அதனுடைய நிர்வாகக் கட்டமைப்புக்கு உட்பட்ட நிலப்பரப்பும் குலையாமல் இருப்பதற்காகத் தாம் எந்த ஒரு சர்வதேச சக்திக்கும் அடிபணிய மாட்டோம் என்ற வீராப்பு நிலைப்பாட்டை அன்றைய ஜே.வி.பி. கொண்டிருந்தது.

நாட்டின் இன்றைய வெளிவிவகார அமைச்சரும் ஜே.வி.பியின் முக்கியஸ்தருமான விஜித்த ஹேரத், 2015 காலப்பகுதிகளில் கட்சியின் பிரசாரப் பகுதிக்கு செயலாளராக பணியாற்றியவர். அவர் அப்பொழுதும் இப்பொழுதும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றாலும், சமஷ்டி ஆட்சி என்பது அதற்கான தீர்வு அல்ல, அதுமட்டுமல்ல, இந்திய ஒப்பந்தம் சமஷ்டியை தராத போதும், அது பிரேரிக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண சபையையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி வருகின்றார். இதற்காக 11 ஜனவரி 2007 இல் நீதிமன்றம் மூலம் அந்த இணைப்பைத் துண்டிப்பதில் முன் நின்றவர்கள் ஜே.வி.பியினர்தான்.

அதே விஜித்த ஹேரத் நல்லிணக்கத்தை பேணக் கோரும்போது வெட்டுக் காயங்களில் புளியைப் பூசியமை போன்று, நாட்டில் மனித உரிமை மீறல்களோ, இனப்படுகொலைகளோ, இனவழிப்போ நடக்கவில்லை, அப்படி நடந்தன என இனத்துவேசவாதிகளால் அரசியலுக்காகத் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன, ஆகவே அப்படி பேசுகின்றமையைத் தடுத்து, அதனைக் குற்றமாக்க சட்டம் ஏற்படுத்துவோம் என்கிறார்.

கட்சியின் தலைமையை 2014 இல் ஏற்ற போது, அநுரா நாட்டு மக்களுக்குத் தாங்கள் ஏற்படுத்திய வன்முறைகளுக்கு மன்னிப்புக் கோரிய போது, தமிழ் மக்கள் அவர்களது (ஜே.வி.பியினரது) கொள்கைகளினால் எதிர் கொண்டவை பற்றியோ, அவர்களுக்கு நேர்ந்த அவலங்கள் பற்றியோ கணக்கெடுக்கவில்லை. அந்த நேரம் அவர் முன் தமிழர்களின் இழப்புகள், பாதிப்புகள் பற்றி எவ்வளவோ சர்வதேச அறிக்கைகள் இருந்தன. ஆயினும் அவரது மன்னிப்பு ஆராதனைகள் சிங்கள - பௌத்த மக்களையே குறி வைத்தன.

விஜித்த ஹேரத் கூட தனது மஞ்சள் காமாலை கண்ணினால், ஏதோ சில ஈழப்போராட்ட கோரிக்கைகாரர்கள், விடுதலை புலிகளின் ஆதரவாளர்களோடு சென்று, கனடாவில் செய்த முறைப்பாடுகளில் அவர்களும் (கனடாத் தரப்பினரும்) தங்களது வாக்குப் பலத்துக்காக ஆதரவு தருகிறார்கள் என எண்ணுகிறார். அது அவரது அறியாமை. கனடாவும் விடுதலைத் புலிகளை தடை செய்துள்ள ஓர் அரசுதான்.

ஆனால், போரில் இடம்பெற்ற சம்பவங்களை ஆழ ஆராய்ந்து, சர்வதேச அணுகு முறையில் அதனை இனக் கொலையாகப் பார்க்கிறது கனடா. அங்கு வதியும் அவர்களது சிங்கள ஆதரவாளர்கள் இதனை ஆட்சேபித்து கனடாவின் உயர்நீதிமன்றுக்கு அப்பில் செய்தும், அவை நிராகரிக்கப்பட்டன. மனித உரிமை கவுன்ஸில் தீர்மானங்களும் அவர்கள் சேகரித்த ஆவணங்களும் கூட உண்டு. அவை கண்டுகொள்ளப்படவில்லை. அநுராவைப் போல விஜித்த ஹேரத்தும் சிங்கள பௌத்த மக்களை ஆராதிக்கின்றார்.

நினைவுச் சின்னங்கள் துயரத்தை - நினைவுகளை - மட்டும் சுமப்பவை அல்ல. அவற்றைச் சுமக்கும் சுமைதாங்கிகளானாலும், வரலாற்றை மறக்காமல், அவை மீள நிகழாதவாறு உறுதிப்படுத்தும் பொது நோக்கையும் அந்த நினைவுச் சின்னங்கள் கொண்டுள்ளன. உலகம் அடங்கிலும், உலகப் போரில் இறந்தவர்களின் நினைவாக இருப்பவை, அங்கு வருடா வருடம் நிகழ்பவை அதற்காகத்தான்.

வரலாற்று நினைவு கூரலை, தங்களது உறவுகளை நினைத்து ஆராதிப்பதை, மக்களின் உரிமை என்பதை இடதுசாரிகளாகப் புரிந்து கொள்ளாதவர்கள், யுத்த வெற்றியைக் கொட்டி குவித்த இராணுவத்தினருக்கு தமிழர் தேசம் எங்கும் நினைவாலயங்கள் அமைத்த போது பாதிக்கப்படாத ஒற்றுமை, நல்லிணக்கம் போன்றவை தமிழ் மக்கள் தங்களது வரலாற்றுக்காக சின்னங்களை அமைக்கும் போது பாதிக்கப்படுகின்றன என குரல் எழுப்பி, விடயங்களைர் திசை திரும்புகின்றனர்.

தொடர்ச்சி▼



இந்திய வெளிவிவகார அமைச்சருடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர்

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?




நினைவுச் சின்னங்கள் துயரத்தை - நினைவுகளை - மட்டும் சுமப்பவை அல்ல.

தொடர்ச்சி▲

இவற்றை நல்லெண்ண குறியீடுகளாக காண்பது எப்படி?

1956 ஆம் ஆண்டு திருகோணமலையில் நடந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியினது சம்மேளனத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் அவற்றின் பிரதி பலிப்பாக அரசாங்கம் நடத்தியவற்றையும் நேற்றைய பதிவில் குறித்திருந்தேன். முதலாவது தீர்மானத்தில் சமஷ்டி அரசு இலங்கையின் ஒற்றுமையான இறையாண்மைக்குள்தான் அமைய வேண்டும் என்று கேட்கப்பட்டது. அதைத்தொடர்ந்த சாத்வீகப் போராட்டங்கள் யாவுமே எதுவித பலனையும் தராதமையால் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி நிறைவேற்றியது. 1956 இல் தொடங்கிய இலங்கையின் இறையாண்மைக்குள் அடங்கிய சமஷ்டி என்ற கோரிக்கை 31 வருடங்களின் பின் இணைந்த – வடக்கு கிழக்கு மாகாண சபையாக இந்திய ஒப்பந்தத்தின் மூலம் ஓர் ஆதரவுத் தளமாக அமைந்தது. ஆனால், உணர்ச்சிகள் நாங்கள் தனிய ரசு பெற வேண்டும், பெறுவோம் என உந்தியதில், அடுத்த 20 வருடங்களும் போராடி, சமஷ்டி முறையில் தீர்வினை அணுகலாம் என நோர்வே சமாதான பேக்களில் இணக்கம் ஏற்பட்டாலும், அதனையும் விட்டு, முள்ளிவாய்க்காலைச் சந்திக்க நேர்ந்தது. இவற்றின் சரி, பிழைகளை ஆராயும் நோக்கம் இந்தக் கட்டுரைக்கு

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

இல்லை.

சரியாகவோ, தப்பாகவோ சமஷ்டி முறையை சிங்கள மக்கள் ஒருவிதமான பிரிவினையாகவே பார்த்தார்கள். சில சமயங்களில் 'சமஷ்டி' என்ற வார்த்தை இல்லாமல் அது இன்னொரு விதமான அரசமைப்பு என்றால் அது ஏற்றுக்கொள்ளப்படலாம் என்ற ஓர் எண்ணம் இலங்கை – இந்திய ஒப்பந்த காலத்திலும் இருந்தது, நல்லாட்சி காலத்திலும் இருந்தது. இந்த இரண்டு காலங்களிலும் இதற்கு வன்மமாக எதிராக இருந்தவர்கள் ஜேவிபியினர்தான். 1983இல் ஜே.ஆர். பேச்சுவார்த்தைக்கு எடுத்த 'மாவட்ட சபைகள்', பின் 1987இல் 'மாகாண சபைகள்', சந்திரிகாவின் 'பிரதேசங்களில் ஒன்றியம்' போன்றவை தொடர்பான பேச்சுகள், இணக்கம் எல்லாவற்றிலும், தாங்கள் அதிகாரம் செலுத்தி விட வேண்டும் என்பதற்கான சந்தர்ப்பவாத அரசியலில் இவற்றை தங்களுக்குச் சாதகமாக, தங்களை சிங்கள – பௌத்த மேலாதிக்கத்தின் காவலர்களாகக் காட்டிக் குழப்பியது ஜே.வி.பிதான்.

இதனையே, நாடு வங்குரோத்து அடைந்து, பொருளாதாரச் சீர்குலைவில் இருந்த போது அதையும், அந்த வங்குரத்து நிலையிலிருந்து மாற்றம் தேவை என்பதையும் சாதகமாக்கி, அத்துடன் இம்முறை சமதர்மம், சம உரிமை, தமிழ் மக்களின் அபிலாசைகள் பேணப்படும் என்பவற்றையும் இணைத்து, தேர்தலைச் சந்தித்து, நாட்டின் நிலைகளால் தாங்களே தனியாக ஆட்சி, அதிகாரத்துக்கு வந்தார்கள். அந்த வெற்றியைப் போரின்போது பெற்ற வெற்றியின் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களுக்கு பல மடங்கு மேலாகக் கொண்டாடினர்.

தேசிய மக்கள் சக்தியின் பெரும் வெற்றிக்குப் பின், ஒரு சிங்களப் பெரும்பான்மைக் கட்சியாக அவர்கள் தமிழ்ப் பகுதிகளில் பெற்ற ஆதரவுகளிலும், தேர்தல் காலங்களில் அள்ளி வீசிய வாக்குறுதிகளிலும் பல அரசியல் ஆய்வாளர்கள் கூட, அதனுடைய பெரும் பங்காளியான ஜே.வி.பியில் பெரும் மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதனை அவர்களின் சிந்தனைகளில் நடந்த பெரிய இரசாயன மாற்றமாகப் பார்க்க வேண்டும் என்றும் அபிப்பிராயப்பட்டார்கள். அவர்கள் ஜீரணித்த இரசாயனங்களின் உந்தல்களால் ஏற்பட்ட மாற்றங்களில் அவர்கள் உறுதியளித்த புதிய அரசமைப்புச் சட்டம், இந்திய ஒப்பந்தம், அதிகாரப் பரவலுக்கும் நிரந்தர சமாதானத்திற்கும் தேவையான காரணிகள் போன்றவற்றைக் கணக்கிட்டு, மாகாணங்களுக்கு சுயமான அதிகார பகிர்வு, அன்றில் மேலும் சென்று, விடுதலைப் புலிகளும் ரணில் அரசும் சமாதான பேச்சு வார்த்தைகளில் ஏற்றுக் கொண்ட 'உள்ளக சமஷ்டி' முறையிலான திட்டம் விரைவில் உருவாகலாம் எனப் பல தரப்பினரும் ஆய்வாளர்களும் எதிர்பார்த்தனர்.

நடைமுறைகளைக் கவனித்தால், ஜனாதிபதியின் கவர்ச்சியும், தேசிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகளும் இணைந்து, நாட்டிற்குத் தற்சமயம் தேவையான தலைமைத்துவத்தை வழங்கி, நாட்டை இனப் பிரச்சினையின் கோரப் பிடியிலிருந்து மீட்டெடுப்பார்களா என்பது, தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே நீடிகின்றது. சிங்களப் பேரினவாதிகளிடம் இருந்து வெளிவரும் கருத்துக்கள், இனப்பிரச்சினைக்கான தீர்வுகளுக்கான வடிவ முறைகளில் அவர்களுக்கு உள்ள எதிர்ப்புகள் என்பன ஒருபுறம் இருக்க, ஜே.வி.பியினரின் பலம் வாய்ந்த தலைவர்களின் போக்குகளும், அரசின் அணுகுமுறைகளுமே அவர்களின் திட்டங்களின் – பேச்சுக்களின் – உண்மை தன்மைகளில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகின்றன.

அரசின் முக்கியஸ்தர் விஜித்த ஹேரத் ஜனாதிபதியுடன் சென்ற இந்திய பயணத்தில் "உலக அரசியல் பலவகையாக மாறி, இன்று வேறு விதமாக ஆகி விட்டது. அதனை அடுத்து நாங்களும் மாறிவிட்டாலும், நாங்கள் ஒரு தேசமாக மற்றைய தேசங்களின் தேவைகளுக்கான வரைவு படங்களில் அடைக்கப்பட மாட்டோம்" என்றும், மேலும் "எங்கள் நாட்டின் சரித்திரத்தில் தொடர்ச்சியாக எங்களது நாட்டின் நிர்வாக கட்டமைப்புக்கு உள்ளான நிலப் பகுதிகள் எமது கைகளிலேயே இருக்க வேண்டும் என்பதற்கான தீர்மானங்களையே மேற்கொண்டோம். ஆகவே நாம் இப்போது மேற்கொண்டு வரும் தீர்மானங்கள் வருங்காலத்துக்கான நமது நிலையும் கூட – அதனை எங்கள் நாட்டு மக்களுக்கு உறுதியாக கூறியுள்ளோம் – அதிலிருந்து நாம் ஒருபோதும் மாறப்போவதில்லை" எனப் பத்திரிகையாளர்களிடையே அறிவித்தார். ஆகவே இரசாயன மாற்றம் இனப் பிரச்சினைக்கு நியாயத் தீர்வு காண்பது பற்றியதாகவோ, தமிழரின் அபிலாசைகளை நியாயமாகத் தீர்ப்பது பற்றியதாகவோ இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தவரை, 'ஒரு நாடு, அதன் நிர்வாகக் கட்டமைப்புக்கு உள்ளான நிலப்பகுதிக்கு ஓர் அதிகாரம்' என்பதுதான். அந்த சிந்தனையில் இருந்து மாறுவதற்கு அவர்கள் தயாராகவில்லை. அதற்கான அரசியல் சந்தர்ப்பவாதங்களையே தேடுகிறார்கள்.

இந்தியப் பிரதமர் மோடியின் நான்காவது விஜயத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அந்த இரசாயன மாற்றம் பொருளாதாரத்தை மீள கட்டி எழுப்பும் முயற்சிகளில் இந்தியாவப் பகைத்தால் இந்தியாவின் பெரும் பொருளாதார நிலையில் அது பகற்கனவாகவே முடியும் என்ற பட்டறிவுதான்.

ஆனால் இந்திய ஒப்பந்த நாளில் பிரதமர் ராஜீவ் காந்தியைத் துப்பாக்கிக் கைப்பிடியால் மண்டையில் அடித்தவரை தேசாபிமானியாக போற்றியவர்கள் மோடிக்கோ செங்கம்பள வரவேற்புக் கொடுக்கின்றார்கள். அதனை ஜே.வி.பி. செயலாளர் றில்வின் சில்வா "நாங்கள் இந்தியாவை ஒரு காலத்தில் பகைத்தமை உண்மைதான். அதற்காக என்றுமே பகைவர்களாக இருக்க வேண்டும் என்பது இல்லை. காலம் மாறிவிட்டது." – என்கிறார்.

விஜித்த ஹேரத்தோ "காலம் மாறிவிட்டது, அதிகாரம் எங்கள் கைகளில்தான், இனப்படுகொலை எனப் பேசி வாலாட்ட வேண்டாம்" என்கிறார். அவரது சிங்கள – பௌத்த மத கோட்பாடுகளில் தங்களது இனத்துக்கும் மதத்துக்கும் எதிராக எந்தக் குற்றம் செய்தாலும், அவர் யாராயினும், அதற்குத் தகுந்தது அல்ல, கொடூர தண்டனை கொடுத்து பழிவாங்கி விட வேண்டும், அந்தக் குற்றத்தின் பாவம் சாந்தி செய்யப்பட்டது ஆகலாம் என்பதுதான். ஆகவே நாட்டைப் பிரித்துக் கேட்டவர்கள், அதனை ஆதரித்த மக்கள், சிங்கள – பௌத்தர்களுக்கு எதிராக அவர்களது நாட்டை பங்குபோட கேட்டுக் குற்றம் இழைத்தவர்கள், அவர்கள் கொல்லப்பட்டமையில் நியாயம் உண்டு என அவர் ஆத்ம சாந்தி அடைகின்றார் போலும்.

(தொடரும்)





# மன்னார் அச்சங்குளம் கடற்படைக் காவலரணில் சூட்டுக் காயங்களுடன் சிப்பாயின் சடலம் மீட்பு!

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட அச்சங்குளம் கடற்கரைப் பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கடற்படைச் சிப்பாய் ஒருவரின் சடலம் ஒன்று நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிப்பாய் தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் அச்சங்குளம் கடற்கரை ஓரத்தில் அமைக்கப்பட்ட கடற்படையின் கண்காணிப்பு காவலரணில் நேற்று வியாழன் காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

சம்பவ இடத்திற்கு முதல் கட்ட விசாரணைகளுக்காக முருங்கன் பொலிஸார் மற்றும் தடயவியல் நிபுணர்கள் சென்று பார்வையிட்டனர்.

பின்னர் மன்னார் மாவட்ட நீதிபதி வருகைதந்துசடலத்தைப்பார்வையிட்டார். விசாரணைகளின் பின்னர் சடலம் நேற்று மாலை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

உயிரிழந்த கடற்படை சிப்பாய் 37 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை எனத் தெரிய வருகிறது.

இந்தக் கடற்படை சிப்பாய் வங்காலை மற்றும் அச்சங்குளம் கடற்படை முகாமில் பணியாற்றி உள்ளார் எனவும் தெரியவருகின்றது.

இவரது மரணத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# புதுக்குடியிருப்பில் மர்மமான முறையில் உயிரிழந்த 25 வயது இளம் குடும்பஸ்தர்

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சந்தைக்கு பின்புற பகுதியிலேயே இளம் குடும்பஸ்தரான 25 வயதுடைய ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# போராட்டத்தில் குதித்துள்ள ஆனையிறவு உப்பளத்தின் ஊழியர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார்

ஆனையிறவு உப்பளத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டி நேற்றுய் வியாழக்கிழமை 9 ஆவது நாளாகப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில் நேற்றைய தினம் மாலை யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அவர்கள் சென்று முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பணியாளர்கள் நான்கு பேர் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில், அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில், யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.அங்கு அவர்கள் தமக்குள்ள பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து முறைப்பாட்டைப் பதிவு செய்தனர்.

ஆனையிறவு உப்பளத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி கடந்த வாரம் புதன் கிழமை (14 ஆம் திகதி) முதல் கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உப்பளத்தின் தற்போது உள்ள பொது முகாமையாளர், முகாமைத்துவ பிரிவினர், உதவி முகாமையாளர், மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட பலர் தம்மை பழிவாங்குவது போன்றே செயற்படுகின்றனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

“எமக்கு உரிய வகையில் வேலைகளை வழங்குவதில்லை. எமக்கான மருத்துவ வசதிகள் உப்பளத்தில் இல்லை. குடி தண்ணீர்ப் பிரச்சினை காணப்படுகிறது. குடி தண்ணீர் வெளியே உள்ள தாங்கியில் இருந்துதான் உள்ளே எடுத்து செல்லவேண்டும்.

“இந்த மாதம் தொடங்கி இதுவரை எமக்கு 4 நாள்களே வேலை வழங்கப்பட்டது. 10 நாள்கள் வேலை இல்லாமலே இருக்கின்றோம். இதை விட இந்த மாதம் வேலைசெய்யாத ஊழியர்கள் கூடகாணப்படுகின்றனர்.

“மனித வலு இருக்கும் போது இயந்திர வலுவை பயன்படுத்துகின்றனர். வேலை செய்யும் எமக்கு சீருடைகளோ, பாதுகாப்பு கவசங்களோ வழங்கப்படுவதில்லை” – என்பவை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, அவற்றை முன்வைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நீதியைஒ பெற்றுக் கொடுக்கும் வகையில் நேற்றைய தினம் வியாழக்கிழமை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் சார்பாக நான்கு பேரை யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைத்துச் சென்று முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஆனையிறவு உப்பளயர்கள் சார்பாக துரித விசாரணைகளை மேற்கொள்வதாக யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த ஊழியர்களிடம் தெரிவித்துள்ளது.





















# முல்லையில் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட ஆறு மீனவருக்கும் 14 நாள்கள் விளக்கமறியல்

(பா.சதீசந்)

கொக்குதொடுவாய் கடற்கரை பகுதியில் சட்டவிரோத முறையில் சுருக்கு வலை தொழிலில் ஈடுபட்டிருந்த நிலையில் ஐந்து மீன்பிடி படகு, இரண்டு சுருக்கு வலைகளுடன் நேற்று முன்தினம் கைதான ஆறு பேரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கொக்குதொடுவாய் கடற்கரை பகுதியில் சட்டவிரோத மீன்பிடித் தொழில் இடம்பெறுவதாக கடற்தொழில் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அந்த இடத்திற்கு சென்ற கடற்தொழில் திணைக்களத்தினர் மற்றும் கடற்படையினர் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டிருந்த ஆறு பேரை

ஐந்து மீன்பிடி படகுகள் மற்றும் இரண்டு தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளுடன் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட ஆறு பேரும் முல்லைத்தீவு மாவட்ட நீதுவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை 14நாள் விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிவான் உத்தரவிட்டார்.

புத்தள மாவட்டத்தை சேர்ந்த ஐந்து நபர்களும், கொக்குதொடுவாய் பகுதியை சேர்ந்த ஒருவருமாக ஆறு பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தனர்.





















# திருகோணமலை முத்துநகரில் 25 விவசாயிகளை வெளியேற்றும் நீதிமன்ற உத்தரவு நடைமுறைக்கு!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, முத்துநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள, இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு என கையகப்படுத்தப்பட்டிருந்த அரச காணிகளிலிருந்து 25 விவசாயிகளை வெளியேறுமாறு திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றுக் காலை நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த நீதிமன்ற அதிகாரிகள் பிரதேசத்திற்கு வந்த போது அவர்களை தடுத்து விவசாயிகள் விவாதத்தில் ஈடுபட்டனர். எனினும் அதிகாரிகள் நீதிமன்ற உத்தரவை பற்றி விளக்கினர். அடுத்து விவசாயிகள் குறித்த வயற்காணிகளைஅளவீடுசெய்துஎல்லைகளை நிர்ணயம் செய்ய அனுமதித்தனர். ஆனாலும் இக்காணிகளை சூரிய மின்சக்தி திட்டத்தை மேற்கொள்ளவுள்ள தனியார் கம்பனிக்கு வழங்க தாம் அனுமதிக்கப்போவதில்லை என்று கூறினர்.

இதுபற்றி குறிப்பிட்ட விவசாயி ஒருவர் –

“1972ஆம் ஆண்டு முதல் எமது பெற்றோரும் தொடர்ந்து நாங்களும் காடாக இருந்த இப்பகுதியை திருத்தி வயற் செய்கையில் ஈடுபட்டு வருகின்றோம். என்னைப்போன்றபலர்ஒன்றுஅல்லது இரண்டு ஏக்கர் காணியிலேயே விவசாயம் செய்கின்றோம். அதற்கு அதிகமான அளவில் இங்கு யாருக்கும் வயல் நிலம் இல்லை. இங்கு விளையும் நெல் எமது உணவிற்கே பயன்படுகின்றது. ஆனால் 2023 ம் ஆண்டிலிருந்தே துறைமுக அதிகாரசபை இக்காணிகளை தமக்குரியது எனக் கூறிவருகின்றது. அவர்களுக்குத் தேவையாயின் இப்பிரதேசத்தில் காடுகளாக உள்ள அரச காணிகள் அதிகளவில் உள்ளன. அவற்றை அவர்கள் பயன்படுத்த முடியும். ஆனால் இவ்வளவு காலமும் நெற்பயிர்ச் செய்கை செய்த வளமான இந்த காணிகளை ஏன் எம்மிடம் இருந்த பிடுங்க முயற்ச்சிக்கின்றார்கள் என்று விளங்கவில்லை.” – என்று விசனம் தெரிவித்தார்.

எவ்வாறு இருந்த போதும் காணிகள் தற்போது நில அளவை செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை இக்காணிகள் உட்பட திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவின் 11 கிராம சேவகர் பிரிவுகளில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பயன்பாட்டிற்கென

தொடர்ச்சி▼







# திருகோணமலை முத்துநகரில் 25 விவசாயிகளை வெளியேற்றும் நீதிமன்ற உத்தரவு நடைமுறைக்கு!

தொடர்ச்சி▲

4,000 ஏக்கருக்கும் அதிகளவான காணிகள் அரசினால் கையகப்படுத்தப் பட்டுள்ளன.

இக்காணிகளில் 50 வருடங்களுக் கும் அதிக காலம் பொதுமக்கள் பயிர்செய் கைகளில் ஈடுபட்டும், குடியிருப்பு- களை அமைத்தும் வாழ்ந்து வருகின்ற னர்.

நீண்ட காலமாக சர்சைக்குரியதாக காணப்படும் இக்காணிகளில் தற்போது வாழும் மற்றும் பயிர்செய்கைகளில் ஈடு படும் பொதுமக்களின் 1,700 ஏக்கர் காணிகளை சட்டரீதியாக அவர்களுக்கு விடுவித்து வழங்க சில தினங்களுக்கு முன்னர் ஏற்பாடுகள் அரச தரப்பால் தொடங்கப்பட்டுள்ளன என வெளிவிவ கார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப் புத் துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா கூறியிருந்தார்.இது பற்றி மேலும் அவர் கூறுகையில் –

“துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் பிரதி அமைச்சர் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபைத் தலைவர் உட்பட அதன் சிரேஷ்ட அதி காரிகளுடன் இவ்விடயம் குறித்து விசேட மாக கலந்துரையாடியுள்ளேன். அதன் படி விரைவில் சாதகமான முடிவுகள் கிடைக்கும்”என்றார்.

இத்தகைய நிலையில் நேற்று முத்து நகரில் நீதிமன்ற உத்தரவு நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது.





# சங்கிலியன் மன்றத்தின் அமுத விழா

**யாழ்ப்பாணம், மே 23**

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 80 ஆண்டுகள் நிறைவை முன் னிட்டு அமுத விழாவும் பாரம்பரிய விளையாட்டு விழாவும் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கிலியன் மன்ற முற்றத்தில் நிலையத்தின் தலைவர் வி. ஜனகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில்பிரதமவிருந்தினராகநல்லூர் கந்தசுவாமி ஆலய ஆஸ்தான வித்து வான் பிச்சையப்பா ரஜீவன், சிறப்பு விருந்தினராக வட மாகாண பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் க.அறிவரசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.







# பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைக்கு ஐக்கிய அமீரகம் ஆதரவு

பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய அரபு அமீரகம், ஜப்பான் நாடுகள் தங்களின் ஆதரவினை தெரிவித்துள்ளன.

ஒபரேஷன் சிந்தூரின் ஒரு பகுதியாக பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் முயற்சியை விளக்கும் விதமாக ஐக்கிய ஜனதாதளம் கட்சி எம்.பி சஞ்சய் குமார் ஜா மற்றும் சிவசேனா (ஏக்நாத் ஷிண்டே) எம்.பி. ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுக்கள் முறையே ஜப்பான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு பயணித்தன. அங்கு அவர்கள் நேற்று பயங்கர வாதத்துக்கு ஆதரவளிக்கும் பாகிஸ்தானின் கொள்கைகளை எடுத்துரைத்தனர்.

ஏழு பிரதிநிதிகள் குழுக்களில் ஒன்றான, சிவசேனா எம்.பி. ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழு, ஐக்கிய அரபு அமீரகத்தின் பாதுகாப்புக்குழு தலைவர் அலி ரஷித் அல் நுவாமி மற்றும் அமைச்சர் சேக் நஹாயனா ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தை பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்த பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டில் கவனம் செலுத்துவதாக இருந்தது. அப்போது ஸ்ரீகாந்த் ஷிண்டே ஐக்கிய அரபு அமீரகத்தின் உறுதியான ஆதரவினைக் கோரினார்.

இந்த சந்திப்பு குறித்து ஷிண்டே கூறுகையில்,

“ஐக்கிய அரபு அமீரக பிரதிநிதிகளுடனான சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பயங்கரவாதத்துக்கான எதிராக இந்தியாவுடன் ஐக்கிய அரபு அமீரகம் தோளோடு தோள் நிற்கும். தீவிரவாதம் என்பது இந்தியாவின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மட்டும் இல்லை. மாறாக, மனிதகுலத்தின் மீதான தாக்குதல். மதத்தின் போர்வையில் நடக்கும் அனைத்து வடிவிலான பங்கரவாதத்தையும் ஐக்கிய அரபு அமீரக அதிகாரிகள் நிராகரித்தனர்.

பன்முகத்தன்மை மற்றும் வளத்துக்கு பெயர்பெற்ற ஐக்கிய அரபு அமீரகம் சமீபத்திய தாக்குதலைக் கண்டித்த முதல் தேசமாகும். ஐக்கிய அமீரகத்தில் இருக்கும் இந்தியர்கள் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை அனுபவிக்கின்றனர். இது அமைத்திக்கான நாட்டின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.” என்றார்.

இதேபோல், ஜப்பான் சென்றுள்ள ஜே.டி.யு. எம்.பி. சஞ்சய் குமார் ஜா தலைமையிலான குழு ஜப்பானின் வெளியுறவுத்துறை அமைச்சர் டகேஷி லவ்யாவைச் சந்தித்தது. அப்போது, பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் போராட்டத்துக்கு வலுவான ஆதரவினை அளித்த ஜப்பான், இந்தியாவின் நிதானத்தை வெகுவாக பாராட்டியது.

பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும் என்று தெரிவித்த ஜப்பான் வெளியுறவு அமைச்சர், பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் எதிர்த்து போராடுவதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

ஜா தலைமையிலான பிரதிநிதிகள் குழு அடுத்ததாக, தென்கொரியா, மலேஷியா, இந்தோனேஷியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கு பயணிக்க இருக்கின்றது.

ஒபரேஷன் சிந்தூர் குறித்தும், பயங்கரவாத கொள்கைக்கு எதிரான இந்தியாவின் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை குறித்தும் விளக்குவதற்காக ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான குழு அடுத்ததாக, காங்கோ, லைபிரியா மற்றும் சியாரா லியோன் நாடுகளுக்கு பயணிக்க இருக்கிறது.

# தமிழக வெற்றி கழகத்திலிருந்து விலகிய வைஷ்ணவி தி.மு.கவில் இணைந்தார்

தமிழக வெற்றிக் கழகத்தில் இருந்து சமீபத்தில் விலகிய கோவையைச் சேர்ந்த வைஷ்ணவி முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி முன்னிலையில் தி.மு.கவில் இணைந்துள்ளார்.

கோவை கவுண்டப்பாளையத்தைச் சேர்ந்தவர் வைஷ்ணவி. தமிழக வெற்றி கழகத்தில் பணியாற்றி வந்த இவர், சமீபத்தில் அக்கட்சியில் இருந்து விலகினார். அரசியல் கட்சியில் இணைந்து மக்கள் சேவையாற்ற விரும்பினால் பா.ஜ.கவில் இணையலாம் என வானதி சீனிவாசன் தெரிவித்திருந்தார். ம.தி.மு.க. தரப்பிலும் அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று மாலை கோவையில் அமைச்சர் செந்தில் பாலாஜி முன்னிலையில் வைஷ்ணவி, தி.மு.கவில் இணைந்தார். இந்நிகழ்வின் போது, தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் நா.கார்த்திக், தொண்டாமுத்தூர் அ.ரவி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.





# கேரளாவில் 182 பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதி

இந்தியாவின் கேரள மாநிலத்தில் 182 பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கொவிட் 19 பாதிப்பு அதிக அளவில் பதிவாகி வருகின்ற நிலையில் கேரளாவில் இம்மாதம் 182 பேர் புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த தொற்றுநோயைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியமாகும் என அம்மாநில சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.



# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு; இஸ்ரேலிய தூதரக ஊழியர்கள் பலி

அமெரிக்காவின் வொஷிங்டன் டிசியில் உள்ள அருங்காட்சியகம் ஒன்றின் அருகே இஸ்ரேலிய தூதரக ஊழியர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்நாட்டு நேரப்படி இரவு 9.05 க்கு இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

சிக்காக்கோவை சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவர் சந்தேகநபராக அடையாளங் காணப்பட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டிற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

இதேவேளை, அமெரிக்காவில் பயங்கரவாதத்திற்கு இடமில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வொஷிங்டன் டிசியில் உள்ள அருங்காட்சியகம் ஒன்றின் அருகே இஸ்ரேலிய தூதரக ஊழியர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டி அவர் இதனைத் தெரிவித்துள்ளார். யூத எதிர்ப்பு பயங்கரவாதத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

# அமெரிக்கா - ஈரான் இடையே அணுசக்தி தொடர்பில் பேச்சு

அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே அணுசக்தி தொடர்பில் மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக, ஓமான் வெளிவிவகார அமைச்சர் பத்ர் அல்புசைடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க மற்றும் ஈரானிய அதிகாரிகளுக்கு இடையே இன்று இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில், ஈரானின் யுரேனிய செறிவூட்டல் குறித்து அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே சமரசமற்ற நிலைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

ஈரான் தமது அணுசக்தி திட்டத்தைக் குறைப்பது மாத்திரமின்றி, யுரேனிய செறிவூட்டலை முற்றாக நிறுத்த வேண்டும் என, அமெரிக்க அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

எனினும் இந்த நிலைப்பாட்டை ஒரு சிறந்த ஆரம்பமாகக் கருத முடியாது என, ஈரான் தெரிவித்துள்ளது.



அதேநேரம், தமது நாட்டில் யுரேனிய செறிவூட்டல் செயற்பாடுகள் தொடர்பில் அமெரிக்காவின் அனுமதி தேவையில்லை என, ஈரானின் உயர் தலைவர் அயதுல்லா அல் கமேனி தெரிவித்துள்ளார்.



# கிரேக்கத்தில் நில அதிர்வு

கிரேக்கத்தில் 6.1 மெக்னிடியூட் அளவில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்த நில அதிர்வானது இஸ்ரேல், எகிப்து, சைப்ரஸ் ஆகிய நாடுகளிலும் உணரப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. உள்ளூர் நேரப்படி நேற்று காலை 6:19 க்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நில அதிர்வையடுத்து கிரேக்கத்துக்கு ஆழிப்பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், கிரீட் கடற்கரை பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -21.05.2025




உங்கள் அணுகுமுறையில் சிறிது கவனம் தேவை. உங்கள் பிரியமான வர்களுடன் பேசும் போது கவனமாகப் பேசவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதை தவிர்க்கவும். இதனால் நல்லுறவை உருவாக்க முடியும்.

இன்று அதிக செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

சளி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது




வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஒரு உரையாடலை தொடங்குமுன் ஒரு முறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும். விட்டுக்கொடுக்கும் அணுகுமுறை தேவை. சிறிய விஷயங்களை பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

உங்கள் பணகளை சாமார்த்தியமாக அற்ற வேண்டும். இல்லையெனில் பணியில் தரத்தை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்குக் கவலையை அளிக்கும்.

சளி அல்லது முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. உரிய சிகிச்சை மேற்கொள்ளவும். பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது.




இன்று மகிழ்ச்சிகரமாக நாளாக இருக்கும். உங்கள் செயல்களை கவனமாக ஆற்றுவீர்கள். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை சில கொள்கைகளுடன் ஆற்றுவீர்கள். உங்கள் செயல்திறன் நிரூபணமாகி வளர்ச்சி கிடைக்கும். உங்களுக்கு பாராட்டு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வுடன் அணுகுவீர்கள். இதனால் திருப்தி உண்டாகி உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். பணத்தை சேமிக்கும் வாய்ப்பு கிடைக்கும். பயனுள்ள திட்டங்களில் முதலீடு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று காணப்படும் பதற்றத்தைச் சமாளிக்க சமநிலையான அணுகுமுறை தேவை. திருப்தியான மன நிலை ஏற்பட மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறிது கடினமாக காணப்படும். சகபணியாளர்கள் ஆதரவு கிடைக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அவர்களோடு நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

உங்கள் மனதில் ஏதோ இழந்தது போல உணர்வீர்கள். உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று அதிக பண வரவு காணப்படாது. அப்படியே வந்தாலும் தேவையற்ற செலவுகளைச் சந்திப்பீர்கள்.

இன்று இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் உங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.




இன்று தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும். இது உங்களுக்குக் கவலை அளிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகள் இன்று கடினமாக காணப்படும். சகபணியாளர்களின் எதிர்ப்பு உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

இன்று உங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே சூடான விவாதங்கள் ஏற்படலாம். நட்புடன் இருப்பது நல்லது.

நிதி வளர்ச்சியில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். முடிந்த அளவு சேமிக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

பாதுகாப்பற்ற நிலை காரணமாக தலைவலி, உயர் குருதி அழுத்தம் போன்ற பாதிப்புகளுக்கு ஆளாவீர்கள்.




இன்று மகிழ்ச்சியான நாளாக காணப்படாது. என்றாலும் பொறுமை நன்மை தரும். எதையோ இழந்தது போன்ற உணர்வு உங்கள் மனதில் ஏற்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது சில தடைகளை எதிர் கொள்வீர்கள். உங்கள் பணிகளை முறையாகத் திட்டமிடுவது இன்று மிகவும் அவசியம்.

மகிழ்ச்சியை தக்க வைக்க இன்று நீங்கள் உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். நிதிநிலை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். திட்டமிடுவது அவசியம்.

தேவையற்ற குழப்பங்கள் உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுக்கும். ஓய்வாக அமைதியாக இருப்பது நல்லது.




இன்று சிறப்பான நாள். உங்கள் சுய முயற்சி மூலம் வளர்வீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதியின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பிறருடன் சிறப்பாக தொடர்பு கொள்வீர்கள்.

பணி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை திறமையாகக் கையாள்வீர்கள். நீங்கள் முறையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாகவும் உண்மையாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

இன்று வருமானம் அதிகமாகக் காணப்படும். சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வு காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் சமநிலையோடு இருக்கும். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று திருப்தியான நாளாக இருக்கும்.

உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். ஆடு உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் உள்ளிருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிபடுத்துவீர்கள். இந்தப் போக்கின் காரணமாக காரணமாக உங்கள் மீதான மதிப்பு உயரும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் திருப்தியான உணர்வு காணப்படும்.

உங்களிடம் நிறைந்திருக்கும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -21.05.2025




ஆன்மீகச் சொற்பொழிவுகளை கேட்டல், இறைவழிபாடு போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் இன்று ஆறுதல் கிடைக்கும். உங்கள் பேச்சில் கவனம் தேவை. இன்று நண்பர்களை சந்திப்பதை தவிர்க்கவும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்றைய பணிகள் தள்ளிப் போகும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க புத்திசாலித்தனமாக பணிகளை ஆற்ற வேண்டும்.

இன்று நீங்கள் விரும்பும் மகிழ்ச்சி கிடைக்காது. உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது இருவருக்கும் இடையிலான உறவை பாதிக்கும் என்பதால் இதனைத் தவிர்த்தல் நல்லது. பயணத்தின்போது பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

ஒவ்வாமை காரணமாக இன்று தொண்டை வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சமநிலையோடு காணப்படுவீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பிறருடன் கலந்து பேசி மகிழ்வீர்கள்.

கடினமான பணிகளிக் கூட எளிதாகச் செய்வீர்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உண்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவு காணப்படும்.

உங்கள் நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எளிய பணிகளைச் செய்வது கூட கடினமாக உணர்வீர்கள். உங்கள் ஆற்றல் இழந்து காணப்படுவீர்கள். இதனால் விளைவுகளில் பாதிப்பு ஏற்படும். ஓய்வாக இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில அபாயங்களை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும் பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. உறவின் நல்லிணக்கம் பாதிக்கும் வகையில் சில தேவையற்ற பேச்சுக்கள் ஏற்படலாம்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று நீங்கள் பணம் இழக்க நேரலாம்.

தொண்டை வலியால் அவதிப்படுவீர்கள். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்..




இன்று அதிர்ஷ்டமான நாள். நீங்கள் மிகுந்த முயற்சி செய்து அதில் வெற்றியும் காண்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை சிறப்பாக ஆக்குவீர்கள்.

உங்கள் சமயோசித புத்தி இன்றைய பணிகளை எளிதாக்கும். வெற்றி பெற வேண்டும் என்ற உங்கள் மன நிலை உங்கள் பணியில் பிரதிபலிக்கும்.

உங்கள் துணையிடம் உண்மையாக இருப்பீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் இன்று வளர்ச்சி காணப்படும். இலாபகரமான திட்டத்தில் இன்று நீங்கள் பணத்தை முதலீடு செய்யலாம்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

# தென்மேல் பருவப்பெயர்ச்சியால் பல பகுதிகளில் பலத்த மழை



தென்மேல் பருவப்பெயர்ச்சி காரணமாக நாட்டின் தென் பிராந்தியத்தில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

சில பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, மேல், சப்ரகமுவ, வடமேல், மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இன்று இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் இடி, மின்னல் தாக்கங்களால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.